ஏ2/9958/2023

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர்
அலுவலகம், கிண்டி, சென்னை – 32
நாள். 09 .05.2024

**குறிப்பாணை**

பொருள்: பேரிடர் மேலாண்மை – வெப்ப காலநிலைக்கான பருவகாலக் கண்ணோட்டம் – வெப்ப அலைத் தயார்நிலை மேலாண்மை மற்றும் தணிப்புக்கான நடவடிக்கைகள் – வழங்கப்பட்ட வழிமுறைகள் – தொடர்பாக.

பார்வை:
1) Letter No. NC II (1)/716 2822/2024, dated:12.04.2024.
2) இவ்வியக்கக இதே எண் கொண்ட குறிப்பாணை நாள். 23.04.2024

******

மேற்பொருள் தொடர்பாக பார்வை2ல் காணும் குறிப்பாணை மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் தொடர்ச்சியாக, தற்பொழுது நிலவி வரும் அதிக வெப்ப அலை காரணமாக தொழிலாளர்களின் உடல்நலம் பாதிப்படைவதை தடுக்கும் பொருட்டு, திறந்த வெளியில் மேற்கொள்ளப்படும் அனைத்து கட்டுமான பணிகளும் காலை 10 முதல் மாலை 4 வரை மேற்கொள்ளக்கூடாது என அனைத்து கட்டுமான நிறுவனங்களுக்கு அறிவுறுத்துமாறு சென்னை மற்றும் மதுரை இணை இயக்குநர்கள்(BOCW) அறிவுறுத்தப்படுகிறார்கள். இந்நடைமுறை மே மாதம் 2024 இறுதி வரை கடைபிடிக்கப்படவேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகள் கட்டுமான நிறுவனங்களால் பின்பற்றப்படுவதை இணை இயக்குநர்கள் ஆய்வுகள் மூலம் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கோள்ளப்படுகிறார்கள்.

09/05/2024

இயக்குநர் (மு.கூ.பொ),
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
சென்னை – 32

பெறுநர்:
இணை இயக்குநர்(BOCW), தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
சென்னை மற்றும் மதுரை.